॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரியை நம: ॥

॥ ஸ்ரீமதே ஹயக்ரீவாய நம: ॥

॥ ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனருளிச்செய்த

ஒன்பதாவது ரஹஸ்யம்.

ஸ்ரீமத் ரஹஸ்ய ஸந்தேச:.

ஸ்ரீமத் ரஹஸ்ய ஸந்தேசம்.

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥
ராமாநுஜதயாபாத்ரம் ஜ்ஞாநவைராக்யபூஷணம் ।
ஸ்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேசிகம் ॥

சீரொன்று தூப்புற்றிருவேங்கடமுடையான்
பாரொன்றச்சொன்ன பழமொழியுள்—ஓரொன்று
தானேயமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.

கட்டளைக் கலித்துறை.

யானறியுஞ் சுடராகி நின்றேன் மற்றும் யாது மல்லேன்
வானமருந்திருமா லடியேன் மற்றோர் பற்றுமிலேன்
தானமு தாமவன் தன் சரணே சரணென்றடைந்தேன்
மானமிலா வடிமைப் பணிபூண்ட மனத்தினனே. 14

இந்த ஸ்ரீமத்ரஹஸ்ய ஸந்தேசத்தில் ப்ரபத்தியை யனுஷ்டிக்கும்பொழுது அவஶ்யம் அநுஸந்தேயங்களான திருமந்திரத்தின் அர்த்த விசேஷங்களை 'ஸஹஸ்ரோத்ரா' என்கிற ஶ்லோகம் சுருக்க

ப்ரதிபாதிக்கிறதென்றருளிச் செய்யப்போகிறவராய் அந்த ஸ்லோகார்த்தத்தை எல்லோரும் எளிதிலறியும் பொருட்டு ஒரு பாட்டினாலருளிச்செய்கிறார்—'யானறியும்'என்றாரம்பித்து. யான் - நான், அறியும் - தர்மபூத ஜ்ஞானத்தினால் இதர வஸ்துக்களையறிகிற, சுடராகி - ஸ்வயம் ப்ரகாஸமாகி, அதாவது ஜ்ஞான ஸ்வரூபனாகி, நின்றேன் - நிற்கிறேன், அதாவது ஜ்ஞான ஸ்வரூபனுமாய் ஜ்ஞானகுணகனுமாய் இருக்கிறேன் என்று தாத்பர்யம். மற்றும்- வேறான, யாதும் அல்லேன்- எந்த வஸதுக்களும் இல்லை, 'யாதும்' என்பதினால் தேஹேந்த்ரியாதிகளுமில்லை என்பது மேற்படுகிறது வான் - பரமபதத்தில், அமரும் - நித்யவாஸம் செய்கிற, திருமால் - ஸ்ரிய:பதிக்கு, திருவோடு கூடியமால் என்றர்த்தம், அடியேன் - ஸேஷபூதன், மற்று - வேறு, ஓர் பற்றுமிலேன் - ஒரு விதமான வஸ்துக்களை ஸேஷபூதமாக வுடையவனுமல்லேன். இங்கு 'பற்று' என்பது பற்றப்படும் வஸ்து, அதாவது எனக்குச் ஸேஷபூதமென் றங்கீகரிக்கப்படுகிற வஸ்துவைச் சொல்லுகிறது. தான் - தானே, அமுதாமவன்தன் - அமுதமாயிருக்கிற அந்த ஸ்ரிய:பதியினுடைய, சரணே - திருவடிகளையே, சரணென்று-உபாயமென்று, நிஸ்சயித்து அடைந்தேன் – ஆஸ்ரயித்தேன், மானமிலா - அளவில்லாததான, அஸேஷஸேஷதைகரதிரூப என்பதிக்கு அநுஸந்தேயம். அன்றிக்கே 'மானம்' என்பது அபிமானம் ஸ்வாதீந ஸ்வார்த்த கர்த்ருத்வ போக்த்ருத்வாதி மானங்களில்லாத, அடிமை - கைங்கர்யமாகிற, பணி- வ்ருத்தியை, பூண்ட - ஆசைப்பட்ட, இங்கு பூண்ட என்பதினால் இது ஆத்மாவுக்கு ஆபரணம். 'ஸ்ரு ஜஸ்யாநவ்யா ஞாயெ ஞாவெறிமெராஜம்கூதஃ' என்கிறபடியே 'பூமருவு, நறுங்குஞ்சி புன்சடையாய்ப் புனைந்து பூந்துகில்சேரல்குல் காமரெழில் விழலுடுத்து கலனணியாதங்கங்கள் அழகுமாறி' நிற்கும்பொழுது, பகவத் கைங்கர்யமாகிற புருஷார்த்தத்திற்கு உபயோகமான ஆகாரத்தை யநுஸந்தித்து 'ஸலங்க்ருதஃ' என்று மஹருஷியும் ப்ரயோகித்தானிறே அப்படி யிருக்கிறபடியினால் அந்தக் கைங்கர்யம் ஆத்மாவிற்கு நிலைநின்ற ஆபரணம் என்னக்குறையில்லையிறே என்று தாத்பர்யம். மனத்தனனே - மனத்தையுடையவன். 'யான்' என்பது எழுவாய். மனத்தனனுக்

கொண்டு தானமுதாமவன்றன் இத்யாதி அடைந்தேன் என்றவ்வயம் சொன்னால் ஸ்லோகத்திற்குப் பொருந்தியிருக்கும் இந்தப்பாட்டில் 'யான்' என்பது 'அஹம்' என்பதினர்த்தத்தை விவரிக்கிறது, 'அறியும் சுடராகி நின்றேன்' என்பது 'ஜ்ஞாதா' என்பதினர்த்தத்தை விவரிக்கிறது, 'மற்றும் யாது மல்லேன்' என்பது 'நதேஹோநாலி' என்பதினர்த்தத்தை விவரிக்கிறது, ஸ்லோகத்தில் 'தேஹ' என்றது இந்திரியாதிகளுக்கும் உபலக்ஷணம் என்று திருவுள்ளம் 'வானமரும் திருமாலடியேன்' என்பது 'விஷ்ணுசேஷ:' என்பதினர்த்தத்தை விவரிக்கிறது, இங்கு 'விஷ்ணு' சப்தம் விஷ்ணு பத்னிக்கும் உபலக்ஷணம் என்று திருவுள்ளம், பாட்டில் 'வான்' என்னும் பதத்திற்கு ஹ்ருதய கமலத்திலிருக்கும் ஸூக்ஷ்மமான தஹராகாசத்தைச் சொல்லி அதிலமரும் என்று பொருளாகவுமாம். அப்பொழுது 'விஶ்வரூபவைபவே' என்கிறதாலேயில் நிஷ்பர்கமான விஷ்ணு என்கிற பதத்தின் அர்த்தம் அருளிச்செய்யப்பட்டதாயிற்று, 'மற்றோர் பற்றுமிலேன்' என்பது 'அநந்யஸஹ:' என்பதினர்த்தத்தை விவரிக்கிறது, 'தானமுதாம் × × × அடைந்தேன்' என்பது 'தமேவ ஶரணம் வ்ரஜேத்' என்பதினர்த்தத்தை விவரிக்கிறது, அங்கு 'ஏவ' காரம் ப்ராப்யனவனையே ப்ராபகனென்று சொல்லுகிறதென்கிற அர்த்தத்தைத் திருவுள்ளம்பற்றி 'தானமுதாம்' என்றருளிச் செய்யப்பட்டது. 'தமேவ, தமேவைகம்' என்கிற பதங்களில் 'தத்' என்னும் பதமிருப்பதினால் ப்ராப்யத்வ மேற்பட்டதாகவுமாம். 'அமுது' என்பது போக்யத்வத்தைச் சொல்லியதினால் ப்ராப்யத்வத்தைக் குறிக்கிறது என்று தாத்பர்யம். அங்கு 'தமேவ' என்று பொதுவாகச் சொல்லியிருந்த போதிலும் 'ஸித்தோபாய ஸாத்யோபாய ஸூசகங்களாகிய' ங்களாலும், பூர்வாசார்ய ஸம்ப்ரதாயங்களாலும், த்வயமந்திரத்தில் கண்டோக்தமாயிருக்கிறபடியினாலும், தாஸபூதன் இழியும் துறை என்கிற ஔசித்யத்தினாலும் திருவடிகளையே குறிக்கிறது என்கிற திருவுள்ளத்தினால் 'சரணே' என்றருளிச் செய்யப்பட்டது. 'ஏவ' காரம் இதரோபாயங்களை வ்யவச்சேதிக்கிறது என்பதைத் திருவுள்ளம்பற்றி 'சரணே' என்று

அஹமாத்மா நதேஹோஸ்மி விஷ்ணுசேஷோऽநந்யார்ஹ:।
தமேவ சரணம் ப்ராப்தஸ்தத்கைங்கர்ய விவக்ஷயா ।

அயர்வறும மரர்களான அநந்தகருடவிஷ்வக்ஸேநாதிகளோடு துல்யமாக அபரிச்சிந்ந புருஷார்த்தமான பகவத்கைங்கர்யத்திற்கு ஸ்வரூபயோக்யதை யுண்டாயிருக்க அநாதிமாயையாலே ஸுப்தனாய் அநந்தக்லேசபாஜந

ளிச் செய்யப்பட்டிருக்கிறது. பாட்டின் சேஷம் ‘தத்கைங்கர்யவிவக்ஷயா’ என்பதினர்த்தத்தை ஸங்க்ரஹிக்கிறது.

இப்படி ஒரு பாட்டினலருளிச் செய்யப்பட்ட அர்த்தங்களுக்கு மூலமான ச்லோகத்தை உதாஹரித்தருளுகிருர்—‘அஹமாத்மா’ என்றாரம்பித்து. அஹம் - நான், ஆத்மா – சேதனன், தேஹ: - தேஹமாக, அதாவது சரீரம் முதலியவைகளாக, நாஸ்மி – ஆகிறேனில்லை, விஷ்ணுசேஷ: - பகவானுக்குச் சேஷபூதன், அநந்யார்ஹ: - வேறொரு வஸ்துக்களுக்குச் சேஷபூதமாகவுடையவனல்லன். தத்கைங்கர்யவிவக்ஷயா - அந்தப் பகவானுக்குக் கைங்கர்யங்களைச் செய்யவேண்டுமென்கிற ஆசையினுல், தமேவ - அந்தப் பகவானையே, சரணம் - சரணமாக, ப்ராப்த: - அடைந்தேன்.

இனி இந்த ச்லோகார்த்தம் திருமந்திரார்த்த ஸங்க்ரஹமாகையினுலும், திருமந்திரார்த்தம் ப்ரபத்தி காலத்தில் அவச்யம் அநுஸந்தேயமாகையினுலும் இது அவச்யமுபாதேயம் என்றருளிச்செய்கிருர்—‘அயர்வறுமமரர்களான’ என்றாரம்பித்து. அயர்வு - அஜ்ஞானம், அறும் - இல்லாதவர்களான, அமரர்களான-நித்யஸூரிகளான இங்கு ‘ஆதி’ சப்தம் த்வாரபாலகணாதிபர்களையும் சேர்த்துக்கொள்ளுகிறது. ‘அபரிச்சிந்ந புருஷார்த்தமான - அளவில்லாத ப்ரயோஜனமான, ‘ஸ்வரூபயோக்யதை’யாவது. சேஷபூதர்களாயிருக்கை, ‘ஸ்வரூபயோக்யதையுண்டாயிருக்க’ என்பதற்கு அவர்களைப்போல இவர்களும் சேஷபூதர்களாகையினுல் கைங்கர்யம் செய்ய ஸ்வரூப யோக்யதை யுடையவர்கள் என்று தாத்பர்யம். ‘அநாதிமாயையாலே’ அநாதியான ப்ரக்ருதியாலே, ஸுப்தனாய்-தூங்கினவனாய்,

மான ஸம்ஸாரஸாகரத்திலே யழிந்திக்கிடக்கிற க்ஷேத்ர ஜ்ஞன் ஸர்வகுணை: ஸம்யக்ஜ்ஞோ ஆசார்யனாலே

அதாவது மிகவும் ஜ்ஞானஸங்கோசத்தை யடைந்தவனாய் என்று தாத்பர்யம். அநந்தக்லேசபாஜநமான - எண்ணிறந்த கஷ்டங்களுக்கு இருப்பிடமான, 'ஸர்வகுணை: ஸம்யக்ஜ்ஞோ' என்பதற்கு ஆசார்ய த்வோபயுக்த குணங்களினால் நிறைந்தவனையும், ஸம்யக்ஜ்ஞானத்தை யுடையவனையும் என்றர்த்தம். இங்கு 'ஸர்வகுணை:' என்பதினாலேயே ஆசார்ய த்வோபயுக்த குணகணங்களெல்லாமருளிச் செய்யப்பட்டிருந்த போதிலும் 'ஸம்யக்ஜ்ஞோ' என்று தனித்தருளிச் செய்திருப்பது ஆசார்யனுக்கு அப்படிப்பட்ட குணங்களுக்குள் ஜ்ஞானம் அவஶ்யமாக அபேக்ஷிதம் என்பதைத் தெரிவிப்பதற்காக. அன்றிக்கே 'தெளிவுடைய பரமைகாந்தி பக்கலிலே' என்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்திலருளிச் செய்தபடியே 'ஸர்வகுணை:' என்பதினால் மற்றெல்லாக் குணங்களின் பூர்த்தியும் 'ஸம்யக்ஜ்ஞோ' என்பதினால் 'ஸம்யக்ஜ்ஞாநஸம்பந்நே' இத்யாதிகளில் சொன்ன தேவதாந்தர ப்ரயோஜநாந்தரவை முக்யமாகிய பரமைகாந்தித்வமருளிச் செய்யப்பட்டதாகவுமாம். அதுவுமன்றிக்கே 'ஸம்யக்ஜ்ஞ:' என்பது 'ஸம்யக்ஜ்ஞாந்மோக்ஷஸாதக:' என்கிறபடியே மோக்ஷோபாய நிஷ்டையைச் சொல்லுகிறதாகவுமாம். 'ஆசார்யனாலே' ஆசார்யனுடைய உபதேசாதிகளாலே, இது 'பிறந்து', 'உணர்ந்து', 'இகழ்ந்து' 'பற்றி' என்கிற வினையெச்சங்களோடு அந்வயிக்கிறது. அதாவது க்ஷேத்ரஜ்ஞன் ஆசார்யனாலே ப்ரக்ருத்யாத்ம விவேகம் பிறந்து பகவானுக்கும் தனக்குமுண்டான ஸம்பந்தத்தையறிந்து கர்மங்களினாலுண்டாகிய தேஹம் முதலியவைகளோடு ஸம்பந்தத்தை உபேக்ஷித்து ப்ரபத்தியாகிற உபாயவிசேஷத்தை யனுஷ்டித்து பகவத்கைங்கர்யத்தில் ஆசையுடையவனாய் நிற்கும் நிலையை என்று ஸமுதிதார்த்தம். இவ்வளவும் க்ஷேத்ரஜ்ஞனுக்கு ஆசார்யனாலே பிறக்கிறது. இவைகளில் சில ஆசார்யோபதேசத்தினாலும், சில ஆசார்யனுடைய ப்ரபத்தி அனுஷ்டானத்தினாலும், சில ஆசார்ய கடாக்ஷத்தினாலும் உண்டாகின்றனவாகையினால் 'ஆசார்யோபதேசத்தாலே' என்று ஸ்பஷ்டமாயரு

அத்யந்த ஶோகார்த்தனான வளவிலே நீ அதிதுஷ்கர தர்மங்கள் ஒன்றிலும் அலைய வேண்டாம், அப்பாபங்களை யெல்லாவற்றையும் விடுவிக்கைக்கு ஸமர்த்தனுமாய் அவஸர ப்ரதீக்ஷனுமாய் நிற்கிற என்னை ஒருவனையுமே சரணமாகப் பற்றென்று ஶரண்யனான ஸ்ரிய:பதி தானே சரம ஶ்லோகத்திலே அருளிச் செய்த ஸர்வாதிகார ஶரணாகதியினுடைய விஷய ஸ்வரூப பரிகர பல விஶேஷங்களை விஶதமாக ப்ரகாசிப்பிக்கிற த்வயத்திற்கு அபேக்ஷிதார்த்த ஸங்க்ரஹ ரூபமான திருமந்திரத்திலே ப்ரக்ருத்யாத்ம விவேகமும் ஜீவேஸ்வர விவேகமும் பிறந்து, ஸ்வாபாவிக பகவத் ஸம்

ளிச் செய்யப்படாமல் 'ஆசார்யனாலே' என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. ஶோகார்த்தன் - ஶோகத்தினாலே பிடிக்கப்பட்டவன். 'ஸர்வாதிகார ஶரணாகதியினுடைய' என்பதற்கு ஆகிஞ்சந்ய அநந்யகதித்வங்களையுடைய ஸர்வ வர்ணத்தாராலும் அனுஷ்டிக்கக் கூடியது என்று தாத்பர்யம். 'விஶேஷங்களை' என்னும் பதம் 'விஷய' முதலிய எல்லாப் பதங்களிலும் அந்வயிக்கிறது. அதாவது விஷய விஶேஷம், ஸ்வரூப விஶேஷம், பரிகர விஶேஷம், பல விஶேஷம், இவைகளை என்று அர்த்தம். இவைகளை ஸ்ரீமத் ரஹஸ்ய ஸந்தேச விவரணத்தில் இவர்தாமே வ்யாக்யானம் செய்தருளப் போகிறார். அங்கே கண்டு கொள்ளுவது. 'த்வயத்திற்கு அபேக்ஷிதார்த்த ஸங்க்ரஹ ரூபமான திருமந்திரத்திலே' என்பதற்கு த்வயம் சரண மந்திரமாகையினால் ப்ரபத்தி அனுஷ்டான காலத்தில் அனுஸந்தேயம், அப்பொழுது அதன் அர்த்த விசேஷங்களும் அவஶ்யம் அனுஸந்தேயங்கள். அதில் கீழ் அருளிச் செய்யப்பட்ட விஷய விஶேஷாதிகள், ப்ரகாசமாகச் சொல்லப்பட்டிருந்த போதிலும் ஜீவாத்ம ஸ்வரூபம் முதலிய அவஶ்யம் அனுஸந்தேயங்களான அர்த்தங்கள் விசதமாக ப்ரதிபாதிக்கப் படாமையினால் அவைகளைத் திருமந்திரம் ஸ்பஷ்டமாக ப்ரதி பாதிக்கிறது என்று தாத்பர்யம். 'ப்ரக்ருத்யாத்ம விவேகமும்' என்பதற்கு 'ப்ரக்ருதி' என்னும் பதம் ப்ரக்ருதியின் கார்யங்களான தேஹேந்த்ரியாதிகளைக் காட்டிலும் ஜீவாத்மா வேறுபட்டவன் என்கிற நிஸ்சயமும் என்று அர்த்தம். 'ஜீவேஸ்வர விவேகமும்' என்பதற்கு ஈச்வரனைக் காட்டிலும் ஜீவாத்மா வேறுபட்டவன் என்கிற நிஸ்சயமும் என்று அர்த்தம். இது 'ஸஹஸோத்தா ந தெஹொவஸி' என்பதைத் திருவுள்ளம் பற்றி அருளிச் செய்தபடி. 'ஸ்வாபாவிக பகவத் ஸம்பந்தத்தை

பந்தத்தை யுணர்ந்து, ஔபாதிக தேஹ விபூத்யாதி ஸம்பந்தத்தை இகழ்ந்து, ஸ்வரூபானுரூப பரம புருஷார்த்த ஸித்திக்கு ஸ்வாதிகாரானுகுணமான ஸுகரோபாய விஶேஷத்தைப் பற்றி ஸ்வாமி கைங்கர்ய மனோரதனாய் நிற்கிற நிலையை 'ஜ்ஞாத்வா' என்கிற ஶ்லோகம் ப்ரதிபாதிக்கிறது. இதில் 'ஜ்ஞாத்வா ந தேஹோஸ்மி'

உணர்ந்து' என்பதற்கு ஒரு காரணத்தா லுண்டாகியதன்றிக்கே ஸ்வபாவத்தி லேற்பட்டதாகிய பகவானுக்கும் தனக்குமுள்ள ஶேஷிஶேஷ பாவ ஸம்பந்தத்தை அறிந்து என்றர்த்தம். இது 'விஷ்ணு ஶேஷீ' என்பதைத் திருவுள்ளம்பற்றி அருளிச்செய்தபடி. 'ஔபாதிக தேஹ விபூத்யாதி ஸம்பந்தத்தை இகழ்ந்து' என்பதற்கு பகவானுக்கும் நமக்கும உள்ள ஸ்வாபாவிகமான ஶேஷிஶேஷ பாவ ஸம்பந்தம் போலன்றிக்கே கர்மங்களாகிய காரணங்களா லுண்டாகிய ஶரீரம் க்ருஹம் க்ஷேத்ரம் முதலிய விபூதிகள், இவைகளின் ஸம்பந்தத்தை உபேக்ஷை செய்து, அதாவது விட்டு என்று அர்த்தம். இது 'அபரிக்ரஹ:' என்பதைத் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்தபடி. 'ஸ்வரூபானுரூப' என்பதற்கு ஶேஷபூதனான தன்னுடைய ஸ்வரூபத்துக்குத் தகுந்ததான என்றர்த்தம், 'பரமபுருஷார்த்த ஸித்திக்கு' என்பதற்கு பரிபூர்ண பகவதனுபவத்தினா லுண்டாகிய ப்ரீதியினால் செய்யப்படுகிற கைங்கர்யமாகிற உயர்ந்த பலம் கிடைப்பதற்காக என்றர்த்தம். 'ஸ்வாதிகாரானுகுணமான' என்பதற்கு அகிஞ்சனனாகிய தன் அதிகாரத்திற்குத் தகுந்ததாகிய என்றர்த்தம். 'ஸுகரோபாய விஶேஷத்தை' என்பதற்கு ஸுலபமாய்ச் செய்யக் கூடியதாகிய ப்ரபத்தியாகிய உபாய விஶேஷத்தை என்றர்த்தம். இது 'தயைகஶரணம் ப்ராப்த:' என்பதைத் திருவுள்ளம் பற்றி அருளிச் செய்தபடி. பற்றி - அங்கீகரித்து, அதாவது அனுஷ்டித்து என்றபடி. 'ஸ்வாமி கைங்கர்ய மனோ ரதனாய் நிற்கிற நிலையை' என்பதற்கு ஸ்வாமியாகிய பகவானுடைய கைங்கர்யங்களில் ஆசை யுடையவனா யிருக்கிற ஜீவாத்மாவின் ஸ்திதியை என்று தாத்பர்யம். இப்படி 'ஜ்ஞாத்வா' என்கிற ஶ்லோகத்திற்கு அவதாரிகையும், அது திருமந்திரத்தின் அர்த்தத்தை விவரிக்கிறது என்கிற ப்ரயோஜனத்தையும் அருளிச் செய்து அந்த ஶ்லோகத்திற்குப் பதங்களின் அடைவே வ்யாக்யானம் செய்தருளுகிறார்—'இதில்' என்றுராம்பித்து. 'ஜ்ஞாத்வா ந தேஹோஸ்மி'

"என்கிற இரண்டு வாக்யமும் த்ருதீயாக்ஷரத்தின் பொருளைச் சொல்லுகிறது. 'அஹம்' என்கிற பதத்தாலே அநாத்மந்யாத்ம புத்தியைக் கழிக்கிறது. அநேகாவயவோபசய ரூபமான தேஹத்திற் காட்டில் வேறு என்று சொன்ன விது இந்த்ரியங்களில் அந்யதைக்கும் உபலக்ஷண மாகையாலே பஞ்ச விம்ஸகனுடைய தத்வாந்தர வைலக்ஷண்யம் ஸித்திக்கிறது. 'விஷ்ணுஶேஷீ'

இத்யாதி 'சொல்லுகிறது' இத்யந்தத்திற்கு ப்ரணவத்தில் மூன்றாவது அக்ஷரமாகிய மகாரம் ப்ரக்ருதியைச் சேர்ந்த தத்வங்கள் இருபத்திநாலைக் காட்டிலும் வேறுபட்டவனும் இருபத்தைந்தாவது தத்வமாகிய ஜீவாத்மாவைச் சொல்லுகிறது என்கிற அக்ஷர நிருக்தியின்படி தேஹேந்த்ரியாதிகளைவிட வேறுபட்டது என்றும், 'மந ஜ்ஞாநே', 'மந அவபோதநே' என்கிற தாதுக்களில் நிஷ்பன்னமான பதமாகையினாலே ஜ்ஞாத்ருத்வம், ஜ்ஞான ஸ்வரூபத்வம் இரண்டும் ஏற்படுகிறதென்றும், 'அமஸ்' என்னும் பதத்தில் சாந்தஸ ப்ரக்ரியையாலே 'அவஸ்' என்கிற பாகங்களைத் தள்ளி மிகுதியாயுள்ளது மகாரமாகையினால் காவனென்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறதென்றும் யோஜனைகளைத் திருவுள்ளம் பற்றி அந்த அர்த்தங்களை யெல்லாம் ஸங்க்ரஹேணச் சொல்லுகிறது என்று தாத்பர்யம். 'அஹம் என்கிற பதத்தாலே அநாத்மந்யாத்ம புத்தியைக் கழிக்கிறது' என்பதற்கு 'அஹம்' என்கிற பதத்தின் பொருளே ஆத்மா என்று இந்த ஸ்லோகத்திற் கர்த்தமாகையினால் அத்வைதிகள் அஹங்காரசப்தார்த்தம் அஹம் சப்தார்த்தம், அது ஆத்மாவல்ல என்று சொல்லுகிறது முதலியது நிராகரிக்கப்படுகிறது என்றும், ஆத்மாவல்லாத தேஹமே ஆத்மாவென்கிற புத்தியும் கழிக்கப்படுகிறது என்றும் தாத்பர்யம். 'அநாத்மந்யாத்ம புத்தியை' என்பதற்கு அநாத்மநி ஆத்ம புத்தியை, அதாவது ஆத்மா இல்லாத வஸ்துவில் ஆத்மா என்கிற புத்தியை என்று தாத்பர்யம். 'அநேகாவயவோபசய ரூபமான' என்பதற்கு அநேக அவயவங்களின் சேர்க்கையான என்றர்த்தம். 'இந்த்ரியங்களில் அந்யதைக்கும் உபலக்ஷணமாகையாலே' என்பதற்கு இந்த்ரியங்களைக் காட்டில் வேறுபட்டது என்பதையும் குறிக்கிறதாகையினாலே என்றர்த்தம். பஞ்ச விம்ஸகனுடைய - இருபத்தைந்தாவது தத்வமாகிய ஜீவாத்மாவினுடைய. தத்வாந்தர வைலக்ஷண்யம் - மற்ற வஸ்துக்களைக் காட்டி

என்கிற பதம் ப்ரதமாக்ஷரத்தில் ப்ரக்ருதி ப்ரத்யயார்த்தங்களைக் காட்டுகிறது. இதில் விசேஷ நிர்தேச ஸ்வாரஸ்யத்தாலும், ஸமாஸ ஸ்வாரஸ்யத்தாலும் விஷ்ணுவிற்கே சேஷமென்று தோற்றுகை

லும் வேறுபட்டதா யிருக்கை, அதாவது தேஹம், இந்த்ரியம், மனது, ப்ராணன், தர்ம பூதஜ்ஞானம், இவைகளைக் காட்டிலும் வேறுபட்டதா யிருக்கை, அதாவது ஆத்மா அவயவங்களின் சேர்க்கையினல் உண்டானதல்ல, அப்படியாகில் அதன் அவயவங்களுக்கும் அறியும் தன்மை இருக்கவேண்டும், ஆகையினுல் ஒரு தேஹத்திற்குள் அறியும் தன்மையுடைய அனேக வஸ்துக்கள் இருக்கும்படி வேண்டிவரும் என்றிவை முதலாக ஸர்வார்த்த ஸித்தி முதலிய க்ரந்தங்களில் இவர் தம்மாலே யருளிச் செய்யப்பட்டிருக்கும் யுக்திகளினுல் ஆத்மா அவயவங்களின் சேர்க்கையல்ல என்றேற்பட்டிருப்பதினுலே அனேக அவயவங்களின் சேர்க்கையாகிற தேஹம் ஆத்மாவல்ல என்று சொல்லப்பட்ட படியினுல் இதைப் போல் அவயவங்களின் சேர்க்கையாகிற இந்த்ரியம் முதலியவைகளும் ஆத்மாவல்ல என்றேற்படுகிறது என்று தாத்பர்யம். "விஷ்ணுசேஷ:' என்கிற பதம் ப்ரதமாக்ஷரத்தில் ப்ரக்ருதி ப்ரத்யயார்த்தங்களைக் காட்டுகிறது' என்பதற்கு ப்ரணவத்தில் முதல் அக்ஷரமாகிய அகாரத்தினுடையவும், அதன்மேல் ஏறி லோபித்துக் கிடக்கும் நான்காம் வேற்றுமையினுடையவும் அர்த்தத்தை காட்டுகிறது என்றர்த்தம். அதாவது ப்ரக்ருதியின் அர்த்தத்தை 'விஷ்ணு' என்கிற பதமும், ப்ரத்யயத்தின் அர்த்தத்தை 'சேஷ:' என்கிற பதமும் காட்டுகிறது என்று தாத்பர்யம். 'இதில் விசேஷ நிர்தேச ஸ்வாரஸ்யத்தாலும்' என்பதற்கு விஷ்ணுவிற்கு சேஷபூதன் என்று தனித்து விஷ்ணுவைக் குறித்துச் சொல்லி யிருப்பதின் ஸ்வாரஸ்யத்தாலும் என்று தாத்பர்யம். ஒரு வஸ்துவைக் குறித்து இது இன்னுருடைய வஸ்து என்னில் அது மற்றவர்களுடைய தல்ல என்பது தானே ஏற்படுகிறது போல இவ்விடத்திலும் மற்றவர்களுக்கு சேஷபூதனல்ல என்பதேற்படுகிறது என்று திருவுள்ளம். 'ஸமாஸ ஸாமர்த்யத்தாலும்' என்பதற்கு 'விஷ்ணு சேஷ:' என்கிற பதத்தைப் பிரிக்கும்பொழுது 'விஷ்ணோரேவ சேஷ:' என்று பிரிக்கலாமாகையினுல் அப்படிப் பிரித்திருக்கிற பதங்களின் சக்தியினுலும் என்றர்த்தம். 'அந்ய சேஷத்வத்தையும் கழிக்கிற' என்

யாலே அந்ய ஶேஷத்வத்தையும் கழிக்கிற நமஸ்ஸில் அர்த்தத்தையும் காட்டுகிறது. இந்நமஸ்ஸு தன்னிலே விவக்ஷிதமான பகவச் சரணாரவிந்த ஶரணாகதியை தத்ப்ரேரிதனாய்க் கொண்டு தான் பண்ணின ப்ரகாரம் ‘ தமேவ ஶரணம் வ்ரஜ ’ என்று சொல்லப்படுகிறது. ‘ தஸ்

பதற்கு நமஸ்ஸில் பகவானைத் தவிர மற்ற தனக்கும் ஶேஷனல்லன் என்றேற்படுகிறபடியினால் தனக்கே தான் ஶேஷியில்லாதபோது மற்றவைகளைக் குறித்துச் சொல்லவேண்டியதில்லை என்று தாத்பர்யம். ‘இந் நமஸ்ஸு தன்னிலே விவக்ஷிதமான பகவச்சரணாரவிந்த ஶரணாகதியை’ என்பதற்கு ஸ்தூல யோஜனையின் ப்ரகாரம் நமஸ்ஸு அங்கங்களோடு கூடிய ஶரணாகதியைச் சொல்லுகிறதென்று திருவுள்ளம். ‘தத்ப்ரேரிதனாய்க் கொண்டு தான் பண்ணின ப்ரகாரம்’ என்பதற்கு கர்த்ருத்வம் முதலிய பதங்களை ‘ நம: ’ என்பதோடு சேர்த்துக்கொண்டு அர்த்தம் சொல்லும்பொழுது தனக்கு ஸ்வதந்த்ர கர்த்ருத்வம் முதலியவைகள் இல்லை யென்று ஏற்படுகிறபடியினால் பல ஸங்க கர்த்ருத்வத்யாகம் அர்த்தமாகிறது, அதாவது நமஸ்ஸுக்கு அர்த்தமாகிறது என்றர்த்தம். இந்தப் பல ஸங்க கர்த்ருத்வ த்யாகம் ‘ தமேவ ஶரணம் வ்ரஜ ’ என்கிற இடத்தில் ஏவ காரத்தினாலும், ‘ஶரணம்’ என்கிற பதத்தினாலும் சொல்லப்படுகிறது என்பது தாத்பர்யம். ஏவகாரத்தினால் பலமாயும் கர்த்தாவாயுமிருக்கிற அவனையே என்பது சொல்லப்படுகிறது என்று தாத்பர்யம். “ தஸ் ஶேஷதயா விஶேஷ்யதா ” என்கிற பதம் த்ருதீய பதத்தில் ப்ரக்ருதி ப்ரத்யயாம்ஶ தாத்பர்யத்தை ஸங்க்ரஹிக்கிறது’ என்பதற்கு ‘நாராயணாய’ என்கிற பதத்தில் நாராயண என்கிற ப்ரக்ருதியின் தாத்பர்யத்தை ‘ தஸ் ’ என்னும் பதம் ஸங்க்ரஹிக்கிறது. இம் ஶரண ஶப்தத்தினால் உபாயத்வத்தைச் சொல்லி அவனுடைய கைங்கர்யமே ப்ராப்யமென்று தத் ஶப்தம் ப்ராப்யத்வத்தைக் குறிக்கிறபடியினால் ப்ராப்யத்வ ப்ராபகத்வத்தைச் சொல்லுகிற நாராயண ஶப்தம் ‘ தஸ் ’ ஶப்தத்தினால் ஸங்க்ரஹிக்கப்படுகிறது. அந்தப் பதத்தின் மேலிருக்கிற நான்காம் வேற்றுமை ஶேஷத்வத்தை முன்னிட்டுக் கொண்டு அதின் கார்யமான கைங்கர்யத்தைக் குறிக்கிறது. இங்கு ‘ ஹவெயம் ’ என்கிற ஒரு பதம் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாராதி க்ரந்தங்களில் இவர் தம்மாலேயே அருளிச் செய்யப்பட்

கைங்கர்யாய விஶிஷ்ட்யா' என்கிற பதம் த்ருதீய பதத்தில் ப்ரக்ருதி ப்ரத்யயாம்ஶ தாத்பர்யத்தை ஸங்க்ரஹிக்கிறது. இதில் அர்த்த க்ரமத்தைப் பார்த்தால் தேஹாதி விலக்ஷணனும் ஜ்ஞாதாவாய் ஜ்ஞான ஸ்வரூபனுமாய் இரண்டு படியாலும் ப்ரத்யக்காய் பகவதேக ஶேஷபூதனாய் நிருபாதிக ஶேஷித்வாதி ரஹிதனான நான் நிரவதிக பகவத் கைங்கர்ய ரஸ லாபார்த்தமாக அவன் தன்னையே ஶரணமாகப் பற்றினேனென்று ப்ரபன்னனுடைய ஸ்வநிஷ்டாபி ஜ்ஞானம்

டிருப்பதினால் அது இச்சிக்கப் படவேண்டிய புருஷார்த்தம் என்றேற்படுகிறது. ஆகையினால் 'தஸ்மை கைங்கர்யாய விஶிஷ்ட்யா' என்பதினால் 'நாராயணாய' என்னும் பதம் ஸங்க்ரஹிக்கப்பட்டது என்று திருவுள்ளம். இப்படித் தனித்துப் பதங்களின் அர்த்தத்தை யருளிச்செய்து இதின் திரண்ட பொருளை யருளிச் செய்கிறார் — 'இதில்' என்றாரம்பித்து. அதாவது இது ஶரணாகதியை அனுஷ்டிக்கும் பொழுது அனுஸந்தேயமாகில் நிகழ் காலத்தைக் குறிக்கிற தாது சொல்லப்பட்டிருக்க வேண்டும். அப்படிக் கில்லாமல் 'ப்ரபந்ந: (அடைந்தேன்)' என்று இறந்த காலத்தைக் குறிக்கும்படி பதம் ப்ரயோகிக்கப் பட்டிருப்பதினால் இது ப்ரபன்னன் தன் நிஷ்டையை அநுஸந்தானம் செய்து கொண்டிருப்பதைச் சொல்லுகிறது என்றே சொல்லவேண்டும் என்று திருவுள்ளம். 'நிரவதிக பகவத் கைங்கர்ய ரஸ லாபார்த்தமாக அவன் தன்னையே ஶரணமாகப் பற்றினேன்' என்பதற்கு 'தஸ்மை கைங்கர்யாய விஶிஷ்ட்யா' என்கிற பதத்தை 'தமேவ ஶரணம் ப்ரபந்ந:' என்கிற வாக்யத்தோடு முன்னால் சேர்த்து அந்வயித்துக் கொள்ளவேண்டும் என்று தாத்பர்யம். 'ஸ்வநிஷ்டாபி ஜ்ஞானம் சொல்லுகிறது' என்பதற்கு ஸ்வரூபம் உபாயம் புருஷார்த்தம் இவைகளில் தனக்குண்டாகிய நிஷ்டை உண்டென்றறிவதற்கு உபயோகமான அடையாளமாகிய அநுஸந்தான விஶேஷங்களைச் சொல்லுகிறது, அதாவது முதல் பாதியினால் ஸ்வரூப நிஷ்டையின் அடையாளமாகிய அநுஸந்தானமும், 'தமேவ ஶரணம் ப்ரபந்ந:' என்பதினால் உபாய நிஷ்டையின் அடையாளமாகிய அநுஸந்தானமும், 'தஸ்மை கைங்கர்யாய விஶிஷ்ட்யா' என்பதினால் புருஷார்த்த நிஷ்டையின் அடையாளமாகிய அநுஸந்தானமுமாக இந்த ஶ்லோகத்தில் ப்ரதிபாதிக்கப்படுகிறது என்று தாத்பர்யம். 'ந்யஸ்தபாணுக்கும்' என்பதற்கு

சொல்லுகிறது. ந்யஸ்த பரனுக்கும் இது ஸ்வ பர ஸந்தோஷார்த்தமாக நித்யம் அனுஸந்தேயம்.

சீலங்கவர்ந்திடும் தேசிகர் தேசின் பெருமையினல்
ஆலங்களன்ன துரிதங்கள் மாய்ந்தன துஞ்சல் தரும்
கோலங் கழிந்திடக் கூறிய காலங் குறித்து நின்ரேம்
மேலிங்கு நாம் பிறவோம் வேலை வண்ணனை மேவுதுமே. 15

ஶரணாகதி பண்ணி க்ருதக்ருத்யன விருப்பவனுக்கும் என்று தாத்பர்யம். இது - இந்த ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட ஸ்வ நிஷ்டாபிஜ்ஞானம். ஸ்வ பர ஸந்தோஷார்த்தமாக - தனக்கும் பரமாத்மாவிற்கும் ஸந்தோஷமாகிற ப்ரயோஜனத்திற்காக, அதாவது இந்த ஸ்வநிஷ்டாபிஜ்ஞானங்களை அனுஸந்தானம் செய்து கோபம், துக்கம் முதலிய மனோவிகாரங்கள் இல்லாமல் இருப்பது மிகவும் ஸௌக்யமானது என்று 'ஸந்தோஷாத் ஆத்மநோ ஸாக்ஷாத் ஸமமூர்த்த வந்தாஸ்' என்றிவர் தம்மாலேயே அருளிச்செய்யப் பட்டிருக்கிறபடியினல் விசேஷமான ஆனந்தத்திற்கு ஹேதுவாகிறது இப்படி ப்ரபன்னன் அனுஸந்தானம் செய்துகொண்டிருப்பது பரமாத்மாவிற்கும் ப்ரீதியை உண்டாக்கும் என்று திருவுள்ளம். அன்றிக்கே 'பர' என்பது பொதுவாக அயலாரைச் சொல்லுகிறதாகவுமாம். அப்பொழுது 'தன் கருமம் செய்யப் பிறருகந்தார்' என்கிறபடியே ஶிஷ்டர்கள் ஸந்தோஷப்படுவதற்குக் காரணம் என்று தாத்பர்யம்.

ஸதாசார்ய ப்ரஸாதத்தினலே ஸர்வாநிஷ்டங்களும் நிவ்ருத்தியாகிறபடியினல் இனி துக்கிக்க வேண்டிய அம்ஶம் ஒன்றுமில்லை என்று க்ருத க்ருத்யனுடைய அனுஸந்தான விசேஷத்தை ஒரு பாட்டினல் ஸங்க்ரஹித்தருளுகிறார் — 'சீலம் கவர்ந்திடும்' என்றாரம்பித்து. இந்தப் பாட்டின் விசேஷார்த்தங்கள் இவர் தம்மாலேயே ஸ்ரீமத் ரஹஸ்ய ஸந்தேஶ விவரணம் என்கிற அடுத்த ரஹஸ்யத்தில் அருளிச் செய்யப்படுகிறபடியினல் இங்கு பதவுரை மாத்திரம் எழுதப்படுகிறது.

சீலம் - நல்ல குணங்களை, அன்றிக்கே நல்ல ஆசாரத்தை, கவர்ந்திடும் - அங்கீகரித்துக் கொண்டிருக்கிற, தேசிகர் - ஆசார்யர்களினுடைய, தேசின் - தேஜஸ்வியினுடைய, பெருமையினல் - ப்ரபாவத்தினல், துரிதங்கள் - பாபங்கள், ஆலங்கள் அன்ன - பஞ்சகளுக்கு ஸத்ருஶமாக, மாய்ந்தன - நசித்துவிட்டனகள், துஞ்சல் தரும் - துக்கத்தைக் கொடுக்கிற, கோலம் - (தேவன், மனுஷ்யன் என்று சொல்லப்படுகிற தேஹமாகிற) ரூபங்கள், கழிந்திட - கழிவதற்காக, கூறிய காலம் - ஶாஸ்திரங்களில் ஏற்பட்ட காலத்தை,

ஸ்ரீமத்வேங்கடநாதேந ஸிஷ்யாணாம் ஹிதமிச்சதா ।
இத்தம் ரஹஸ்யஸாரார்த்த: ஸங்க்ஷிப்ய ஸமுபதிச்யத ॥

இதி ஸ்ரீகவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஸ்ரீமத்வேங்கடநாதஸ்ய ஸ்ரீமத்வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு

॥ ஸ்ரீமத்ரஹஸ்யஸந்தேஶ: ஸம்பூர்ண: ॥

குறித்து - ப்ரதிக்ஷித்துக் கொண்டு, நின்றேம் - நிற்கிறேம், மேல் - அப்படி ஶரீரம் கழிந்ததற்குப் பிறகு, இங்கு - இந்த ப்ரக்ருதி மண்டலத்திற்குள், நாம் - ஸதாசார்ய அனுக்ரஹம் பெற்ற நாம், பிறவோம் - பிறக்கமாட்டோம், வேலை வண்ணனை - ஸமுத்திரத்தின் நிறம்போலிருக்கிற வர்ணத்தையுடைய ஸ்ரிய:பதியை, மேவுதும் - கிட்டக் கடவோம். 15

இப்படி இந்த ஸ்ரீமத் ரஹஸ்ய ஸந்தேஶத்தைத் தாம் அருளிச் செய்ததற்கு ப்ரயோஜனத்தை யருளிச் செய்துகொண்டு நிகமனம் செய்தருளுகிறார்—'ஸ்ரீமத்வேங்கடநாதேந' என்றாரம்பிக்கும் ஶ்லோகத்தினால். ஶிஷ்யாணாம் - சிஷ்யர்களுக்கு, அதாவது தம் திருவடிகளை ஆஶ்ரயித்தவர்களுக்கு, ஹிதம் - நன்மையை, இச்சதா - விரும்பிக்கொண்டிருக்கிற, இத்தால் தம் ஶிஷ்யர்களுடைய ஹிதத்தைத் தாம் எப்பொழுதும் விரும்பிக் கொண்டிருப்பதினால் அவர்களுக்குத் தங்களுடைய ஹிதத்தைப்பற்றி அந்வயமில்லாமையினாலே அவர்களுடைய ஹிதத்திற்காகத் தாமே அவர்கள் ப்ரார்த்திக்காமலிருந்தாலும் இக்ரந்தத்தை அருளிச் செய்தாரென்று திருவுள்ளம், ஸ்ரீமத்வேங்கடநாதேந - ஸ்ரீமத் வேங்கட நாதன் என்கிற இவ்வாசார்யனால், ஆஶ்ரிதர்களை ஒருபொழுதும் கைவிடாதவராகிய ஸ்ரீயை உடைய ஆசார்யனால் என்று தாத்பர்யமாகவுமாம், ரஹஸ்யஸாரார்த்த: - ரஹஸ்யங்களின் ஸாரார்த்தம், அதாவது, 'ஸாவதாந ஸமதிஷ்டேந' என்கிற ஶ்லோகத்தில் அருளிச்செய்யப்பட்ட திருமந்திரத்தின் ஸாரார்த்தமாகிய ஸ்வரூப நிஷ்டையும், த்வயத்தின் ஸாரார்த்தமாகிய உபாய நிஷ்டையும், சரம ஶ்லோகத்தின் ஸாரார்த்தமாகிய புருஷார்த்த நிஷ்டையும், அதின் அனுஸந்தானத்தினாலுண்டாகும் கரைதலற்றிருக்கையுமாகிய இவ்வர்த்தங்கள், ஸங்க்ஷிப்ய - சுருக்கி, இத்தம் - இவ்விதமாக, ஸமுபதிச்யத - உபதேஶம் செய்யப்பட்டது.

ஸ்ரீமத் ரஹஸ்ய ஸந்தேஶ வ்யாக்யானம் முற்றிற்று.